தலைப்பு 222 - இலங்கை தரைப்படை
------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தரைப்படையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படைக்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை அதே திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தரைப்படையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை தரைப்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானமற்ற பெறுவனவுகள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 170.16 மில்லியன் தேறிய வருமானம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 10 இராணுவ பண்ணைகள் மற்றும் ஏனைய வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களின் மூலம் மீளாய்வாண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் ஈட்டப்பட்டுள்ள போதிலும் தரைப்படை பணியாளர்கள் மற்றும் அரசாங்க காணிகள் மற்றும் கட்டிடங்கள் உட்பட வளங்களைப் பயன்படுத்தி, இந்த வருமானமீட்டல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த வருமானங்களின் ஒழுங்குமுறை திறைசேரியால் மேற்கொள்ளப்படுகிறது. | மேற்குறிப்பிட்ட வருமானம் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் செலவினங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களை புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் கையகப்படுத்துதல் ஆகியவற்றிற்கான ரூபா 2,780.41 மில்லியன் செலவினம் நிதியல்லாத | எதிர்காலத்தில் இந்த பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனச் செலவினம் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் கூற்றில் (ACA-6) ரூபா 307.71 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | |
| (ii) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6), 09 வகைகளில் சொத்துக்களின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 294.05 மில்லியனால் குறைத்தக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 821.34 மில்லியன் உண்மையான பதிவழிக்கப்பட்ட பெறுமதி புத்தகங்களில் இருந்தான பதிவழித்தல் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பதிவழிக்கப்பட்ட பெறுமதிகள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6), முன்னைய ஆண்டிலிருந்து 68 வகை சொத்துக்களின் இறுதி மீதியை மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக முன்கொண்டு செல்லும் போது ரூபா 14.83 பில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டது. | சிகாஸ் முறைமையில் ஏற்பட்ட பிழை காரணமாக இது எழுந்துள்ளது, அதனை உரிய நேரத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுமதியில் பொருந்தாததற்கான காரணம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6), கட்டிடங்கள், நிர்மாணங்கள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ரூபா 1.48 பில்லியன் தொகையான கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இது பரீட்சிக்கப்பட்டு அதற்கிணங்க சீர்செய்யப்படும். | தொடர்புடைய சொத்துக்களின் பெறுமதிகள் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள 4,439 ஏக்கர் நிலப்பரப்புக்களை உள்ளடக்கிய மொத்தம் 106 காணித் துண்டுகளை மீளாய்வாண்டின் இறுதியளவில் தரைப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவற்றை மதிப்பீடு செய்து கணக்கீடு செயவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்டகாலமாக பாவனையில் உள்ள தரைப்படைக்கு சொந்தமான காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் தரைப்படைக்கு நன்கொடைகள்/ உதவியாகப் பெறப்பட்ட ரூபா 119.51 மில்லியன் பெறுமதியான குதிரைகளை ஏற்றிச்செல்வதற்கான வாகனத்தை உருவாக்குதல் மற்றும் மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களை உள்ளடக்கிய எட்டு வாகனங்களின் பழுதுபார்ப்பு தொடர்பான ரூபா 54.73 மில்லியன் தொகையான மூலதன தன்மையான பழுதுபார்ப்பு கிரயங்கள் உட்பட விவசாயம், கைத்தொழில்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு செயற்திட்டத்திற்கான மூலதனப் பொருட்களின் கொள்வனவு மூலதனமாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் இப்பொருட்கள் மூலதனமாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றின் (ACE-6) பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நடைமுறை வேலையின் மீதி ரூபா 9.05 பில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கடந்த பல ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட்ட ரூபா 7.59 பில்லியன் பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலை பெறுமதியின் கீழ் தற்போதும் வழங்கப்பட்டன. | எதிர்காலத்தில் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் மூலதனச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு, பூர்த்தி செய்யப்படும் ஆண்டில் மூலதனமாக்கப்பட வேண்டியதுடன் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல் தொடர்பான கணக்காய்வு சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 5 சொத்து வகைகளுடன் தொடர்புடைய 28 வகையான சொத்துக்களின் ரூபா 42.06 பில்லியன் கூட்டுமொத்தமான தொகைகள் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6) ஆரம்ப மீதிக்கான சேர்த்தல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இது | இந்த விடயத்தை அரச கணக்குகள் திணைக்களத்துடன் சரிபார்த்து அதற்கிணங்க பதில் அளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய புள்ளிவிபரங்கள் தொடர்பான சரியான விபரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனங்களுக்கு 199 சந்தர்ப்பங்களில் ரூபா 155.56 மில்லியன் கூட்டுமொத்தமான உபகட்டுநிதிகள் வழங்கப்பட்டுள்ளன. | சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவுகளுக்கு முற்பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததன் விளைவாக இந் நிலைமை உருவாகியுள்ளது. | 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 250/2016 (i) ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 12 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளில் இருந்து ரூபா 4.17 பில்லியன் கூட்டுமொத்தம் கழிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டிலிருந்து அதிகரித்த பொறுப்புக்கள் மற்றும் மீளாய்வாண்டில் திரவ நிதி பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது. | 2023 சனவரி 27 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 20 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ரூபா 38.37 பில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 5.51 பில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல், 5 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 2.02 பில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 462.97 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 7 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | செலவினங்களின் சிக்கனம், போதுமான கட்டுநிதிகள் இல்லாமை மற்றும் நாட்டிற்குள் நிலவும் சூழ்நிலைகள் காரணமாக சேமிப்பு ஏற்பட்டது. | மதிப்பீடுகளை இயன்றவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பதினொரு மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாததால், ரூபா 10.64 பில்லியன் தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்ததுடன் ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்காக ரூபா 16.50 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலதிக நேர படிகள், உணவு (ration) படிகள் மற்றும் இழப்பீட்டு படிகளின் அதிகரிப்பு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டு மேலதிக ஏற்பாடுகளின் தேவைக்கு வழிவகுத்தது. | மதிப்பீடுகளை இயன்றவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஏழு செலவின விடயங்களிற்கான தேறிய நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாததன் விளைவாக, ஆண்டின் இறுதியளவில் ரூபா 1.25 பில்லியன் கூட்டுமொத்தமான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தது. | முன்னைய ஆண்டின் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்ததன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | மதிப்பீடுகளை இயன்றவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 222-01-04-1003 (ஏனைய படிகள்), 222-01-02-1202 (எரிபொருள்), மற்றும் 222-01-02-1204 (மருத்துவ வழங்கல்கள்) செலவின விடயங்களிற்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளில் 21 சதவீதம், 27 சதவீதம் மற்றும் 30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முறையே ரூபா 16.30 மில்லியன், ரூபா 321.22 மில்லியன் மற்றும் ரூபா 324.93 மில்லியன் ஆண்டின் இறுதியளவில் சேமிக்கப்பட்டுள்ளது. | திட்டமிட்ட பெறுகைகளை அமுல்ப்படுத்துவதைத் தடுக்கும் தடைகள் காரணமாக இந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | மதிப்பீடுகளை இயன்றவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு தெரிவு செவ்வையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ரூபா 1.79 பில்லியன் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பொறுப்புக்களின் தொகை கடப்பாடுகள் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன. | இது நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கணக்காய்வு தெரிவு செவ்வையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து இருந்த ரூபா 1.72 பில்லியன் கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் உள்ளடங்கிய ரூபா 1.99 பில்லியன் மொத்த பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டது. | கட்டுநிதிகள் இல்லாததால் இந்த நிலைமை ஏற்பட்டது. | நிதிப் பிரமாணங்கள் 94(1) மற்றும் 214 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்ட 31 நிறுவனங்களிலிருந்து மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டதுடன் 27 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 135.22 மில்லியன் கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் அந்த நிறுவனங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை. உறுதிப்படுத்தல்களை வழங்கிய நான்கு நிறுவனங்களில், மூன்று அறிக்கையிடப்பட்ட தொகைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக்களை விட ரூபா 8.99 மில்லியன் குறைவாக உள்ளதுடன் மீதமுள்ள நிறுவனம் ரூபா 1.56 மில்லியனை அதிகமாக அறிக்கையிட்டது. | இந்த முரண்பாடுகளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கான காரணங்கள் குறிப்பாக இனங்காணப்பட வேண்டும், மேலும் திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் 10 செலவின விடயங்கள் தொடர்பான 16 செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 783.41 மில்லியன் கூட்டுமொத்தமான மூலதன நிதியேற்பாடுகளில் ரூபா 35.18 மில்லியன் நிதியேற்பாடு மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்படாமல் இருந்தது, இந்த மீதமுள்ள நிதியேற்பாடுகளின் சதவீதம் | பெறுகை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் உகந்த அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். |

4 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. 2022 ஆம் ஆண்டில் தங்காலை பெண்கள் பாடசாலையின் கட்டிடங்களை புனரமைப்பதற்காக ரூபா 23.13 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் முழு நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இதே புனரமைப்புக்காக ரூபா 24.32 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 17.98 மில்லியன் அல்லது 74 சதவீதம் செலவிடப்பட்டு, புனரமைப்பு பணிகளில் ஏறத்தாழ 15 சதவீதம் மாத்திரமே பூர்த்தியடைந்துள்ளன.

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு ஆண்டிற்கு மேற்பட்டு 32 ஆண்டுகள் வரையான காலமாக சேவையை விட்டு வெளியேறிய 938 இராணுவ அதிகாரிகள் மற்றும் 436 சிவில் உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 33.31 மில்லியன் கூட்டுமொத்தமான இடர் கடன், பண்டிகை முற்பணம் மற்றும் விசேட முற்பணக் கடன் மீதிகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன் மீதிகளில், ரூபா 11.94 மில்லியன் தொகை 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன் மீதிகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 50 ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் 84 சிவில் அதிகாரிகளிடம் இருந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாமல் இருந்த மொத்த கடன் மீதிகள் ரூபா 6.60 மில்லியன் தொகையாகும். இந்தக் கடன் மீதிகளில் ரூபா 5.04 மில்லியன் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்த போதிலும் அவை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன் மீதிகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை விதிகள் | | | | |
| (i) V மற்றும் XLVIII ஆம் அத்தியாயங்களின் 7.1 மற்றும் 37.1 ஆம் பிரிவுகள் மற்றும் 214 மற்றும் 216 ஆம் விதிகள். | | சிவில் நிர்வாக இயக்குனரகத்தில் சேவையாற்றியிருந்த 56 ஊழியர்களுக்கான பதவிவெறிதாக்கல் அறிவிப்புக்கள் 02 மாதங்கள் முதல் 10 வருடங்கள் மற்றும் 6 மாதங்கள் வரை காலதாமதமாகியுள்ளன. இதனால், இந்த உத்தியோகத்தர்களுக்கு மேன்முறையீடு செய்யும் வாய்ப்பு பறிபோயிருந்தது. | அலுவலகங்களின் அதிகப்படியான விரிவாக்கத்தால் தாமதம் ஏற்பட்டது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) V மற்றும் XLVIII ஆம் அதிதியாயங்களின் 7.4 மற்றும் 37.2 ஆம் பிரிவுகள் மற்றும் 215 மற்றும் 220 ஆம் விதிகள். | | சிவில் நிர்வாக இயக்குனரகத்தில் கடமையாற்றி 1993 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அவர்களது பதவி வறிதாக்கப்பட்ட 126 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் வெளியேறி மூன்று மாதங்களுக்கும் மேலான | பதவி வெறிதாக்கல் அறிவிப்புக்கள் வெளியிடப்படாதவர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, அவர்கள் மீண்டும் சேவையில் இணைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியின் பின்னர் மீண்டும் சேவைக்கு வருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல சந்தர்ப்பங்களில் சேவையில் இருந்து விலகிய ஊழியர்களும் இவ்வாறே மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். | | |
| (iii) VII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | சிவில் நிர்வாக இயக்குனரகத்தில் நிரந்தர சேவையில் உள்ள 835 ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள ஏற்றம் கடந்த பல ஆண்டுகளாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த தாமதங்களை சீர்செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள். | | | |
| நிதிப் பிரமாணம் 104(3) | 2000 மற்றும் 2020 இற்கு இடையில் இடம்பெற்ற நான்கு சம்பவங்களில் இருந்தான ரூபா 1.50 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டம் தொடர்பாக பூர்வாங்க அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ரூபா 2.83 மில்லியன் கூட்டுமொத்த நட்டம் | நட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கைகளை சமர்ப்பிப்பதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளடங்கிய இரண்டு நட்ட சம்பவங்களுக்கான பூர்வாங்க அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் ஏழு மாதங்கள் தாமதம் ஏற்பட்டது. | | |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 1989 மார்ச் 23 ஆம் திகதிய 19/89, 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017, 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கைகள். | சிவில் நிர்வாக இயக்குநரகத்தில் மொத்தம் 8,325 பணியாளர்களின் வருகை மற்றும் புறப்படுதலை கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் இந்த பதவியணியினருக்கு சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேர படிகள் என ரூபா 5.47 பில்லியன் கூட்டுமொத்தம் செலுத்தப்பட்டது. | எதிர்காலத்தில் கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2005 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 14/2005 ஆம் இலக்க சுற்றறிக்கை | சிவில் நிர்வாக இயக்குனரகத்தில் பணியாற்றி கடந்த 7 வருடங்களில் ஓய்வுபெற்ற 277 ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளை பூர்த்தி செய்வதில் 02 மாதங்கள் முதல் 07 ஆண்டுகள் வரை தாமதம் ஏற்பட்டது. | எதிர்காலத்தில் காலதாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஆயுதப் படைகள் 4,243 வாகனங்களை முறையான எரிபொருள் நுகர்வு பரிசோதனையை செய்யாமல் பயன்படுத்தியுள்ளன. | 2024 ஆம் ஆண்டில் தொடர்புடைய பரிசோதனையை விரைவாக நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 4.1.1 (இ), 8.1.1 (அ), (ஆ), 8.11 ம ஆம் வழிகாட்டல்கள் | திட்டங்களில் சேர்க்கப்படாதமை, கட்டுநிதிகள் குறித்து திறைசேரிக்குத் தெரிவிக்காதமை மற்றும் நிதியேற்பாடுகள் கிடைப்பதற்கான சான்றிதழ் இல்லாதமை காரணமாக ரூபா 872.35 மில்லியன் தொகையான நிர்மாணப் பொருட்களின் பெறுகை இரத்து செய்யப்பட வேண்டியிருந்தது. இதில் ரூபா 357.32 மில்லியன் கூட்டுமொத்தமான ஐந்து பெறுகைகள் ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் இரத்து செய்யப்பட்டது; எனினும், இது தொடர்பான உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தேவையான வழங்கல்கள் கிடைக்காததால், ஆயுதப்படைகளுக் | நாட்டில் நிலவும் நிலைமைகளின் விளைவாக வழக்கத்திற்கு மாறாக தாமதமான பெறுகை நடவடிக்கைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குள் நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் தடைகள் ஏற்பட்டுள்ளன. | | |
| (ii) | 8.9.1(ஆ) வழிகாட்டல் | மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 8.15 மில்லியன் கூட்டுமொத்த தொகையான வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் உதிரி பாகங்களை கொள்வனவு செய்வதற்கும் வழங்குநர்களுடன் எந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. | எதிர்காலத்தில் வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2021 ஏப்ரல் 21 ஆம் திகதிய 9.3.1(ஆ) வழிகாட்டல் மற்றும் திருத்தங்கள் | மீளாய்வாண்டின் போது ரூபா 848.65 மில்லியன் மொத்த கிரயத்தில் 663 வாகனங்களை பழுதுபார்க்கும் போது தரைப்படை வரிசை அமைச்சின் செயலாளரிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள அறிவுறுத்தல்கள் 2019 மார்ச் 21 ஆம் திகதிய ரீஓ/பீஈ2/வருமானமல்லாதது/தரைப்படை மற்றும் 2020 ஒக்தோபர் 28 ஆம் திகதிய ரீஓ/பீஈ2/4/வருமான | மீளாய்வாண்டின் சனவரி மற்றும் ஆகஸ்ட் 31 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில், இலங்கை தரைப்படை வெளிநாட்டு நாணயத்தில் | ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர தூதரகத்தால் சரிபார்க்கப்பட்டதைத் தொடர்ந்து, திரட்டிய நிதியத்திற்கு நிதிகளை செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் | திறைசேரியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மல்லாதது/தரைப்படை ஆம் இலக்க கடிதங்கள் | (ஐ.அ.டொலர்கள்) சம்பாதித்த ஐ.அ.டொலர் 58,626 முதல் ஐ.அ.டொலர் 2,332,588 வரையிலான தொகையை பட்டியலிடப்பட்ட திகதியில் திறைசேரிக்கு அனுப்பாமல் வெளிநாட்டு அமைதி காக்கும் பணிகளில் இராணுவ வீரர்களை ஈடுபடுத்தியதன் மூலம் ஈட்டியுள்ளது. | எடுக்கப்படும். |

**2.7 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8.82 மில்லியன் தொகையான 123 வைப்புக்களின் கூட்டுமொத்தம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இதனை நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 03 செலவின விடயங்களுக்கு 100 சதவீதம் இலக்கிடப்பட்ட பௌதீக முன்னேற்றம் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக செயலாற்றல் ஒரு செலவின விடயத்திற்காக 50 சதவீதம் மற்றும் 74 சதவீதத்திற்கிடையிலும் ஏனைய இரண்டு செலவின விடயங்களுக்காக 75 சதவீதம் மற்றும் 89 சதவீதத்திற்கிடையிலும் இருந்தது. | கட்டுநிதிகள் கிடைக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட திட்டங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 1.71 பில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடங்கப்பட்ட அலுவலக கட்டிடங்கள், பல மாடி வீடுகள், உத்தியோகபூர்வ குடியிருப்புக்கள், களஞ்சியங்கள், பொது பொழுதுபோக்குக்கான கட்டிடங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் உட்பட 38 நிர்மாணங்களின் பூர்த்திசெய்தல் சதவீதம் 0% முதல் 95% வரையிலான வீச்சில் இருந்தது. பூர்த்தியடையாத பணிகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 629.05 மில்லியன் தொகையாகும். | கட்டுநிதிகள் கிடைக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட முன்னேற்றம் உரிய செயற்திட்டங்களில் இருந்து ஆண்டின் இறுதியளவில் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் இணங்கப்பட்ட வாகனங்கள்/ உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்களை எடுத்துச் செல்வதில் தாமதம் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் செயற்பாட்டிற்கு தகுதியற்றதாக உள்ளமை காரணமாக 2019 மற்றும் 2022 இற்கு இடையில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்டிருக்கக்கூடிய ஐ.அ.டொலர் 3.33 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இவை கடற்படை நடவடிக்கைகளில் தாமதம் உட்பட கட்டுப்பாடற்ற நிலைமைகளிலிருந்து எழும் சூழ்நிலைகளாகும். | மேற்குறிப்பிட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மூன்று வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்காக முதன்மை பெறுகைத் திட்டம் எதுவும் வகுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 57.23 பில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் எதிர்பார்க்கப்படும் அளவுகளைக் குறிப்பிடவில்லை. | பெறுகை திட்டங்கள் 2024 ஆம் ஆண்டு முதல் முறையாகத் தயாரிக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டவாறு மட்டுப்படுத்தப்பட்ட/ கட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி கேள்வி முறை, தேசிய போட்டி கேள்வி முறை மற்றும் கடை முறை ஆகியவற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1580.17 மில்லியன் பெறுகை கேள்வி திறக்கும் கட்டம் வரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமிக்கத் தவறியதால் பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதில் தடைகளை எதிர்கொண்டது. இந்த ஒவ்வொரு முறையின் கீழும் மேற்கொள்ளப்படும் பெறுகைகளில் வெளிப்படுத்தப்பட்ட பொதுவான கண்டுபிடிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. | 2024 ஆம் ஆண்டு முதல் பொருந்தக்கூடிய பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பதிவு செய்யப்பட்டுள்ளது. | 2.6.1(அ)(I), (II), (III) மற்றும் 5.3.1(உ) பிரிவுகளில் உள்ள பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (i) பெறுகை வழிகாட்டல்களின் 3.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களைப் புறக்கணித்து, மட்டுப்படுத்தப்பட்ட/ கட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி கேள்வி முறை ரூபா 1298.81 மில்லியன் தொகையான பெறுகைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல்களின் 4.2.2(அ) பிரிவின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு பெறுகை அட்டவணை இல்லாததால் பெறுகை செயன்முறை குறிப்பிடத்தக்களவு காலத்தை எடுத்தது. மேலும், பெறுகைக் கையேட்டின் 7.4 மற்றும் 7.5 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுடன் இணங்காத காரணத்தால் கேள்வி திறக்கப்பட்ட திகதியிலிருந்து தொழில்நுட்பக் குழு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான காலம் 96 முதல் 368 நாட்கள் வரையான வீச்சில் இருந்தது. மேலும், கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து களஞ்சியத்தில் தொடர்புடைய | எதிர்காலத்தில் இந்த வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், மேலும் தாமதங்களைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கைகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான காலம் 42 முதல் 884 நாட்கள் வரையான வீச்சில் இருந்தது. | | |
| (ii) | கடை முறையின் கீழ் ரூபா 41.20 மில்லியன் தொகையான பெறுகை செயன்முறையின் போது கேள்வி பெறப்பட்டதை முறையாக உறுதிப்படுத்த தவறியமை மற்றும் கையிருப்பு இல்லாத வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகளைக் கோருதல் என்பன போட்டிக் கேள்விகளைப் பெறுவதில் தடையாக இருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | போட்டி கேள்விகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்திற்காகவும் தரைப்படையின் எதிர்கால மூலோபாயங்களை அமுல்ப்படுத்துவதற்காகவும் 35,000 தனியாருக்குத் தேவையான ஆடைகள் மற்றும் புடைவை பொருட்கள் போன்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், ரூபா 24.92 மில்லியன் கிரயத்தில் 15,000 அலகுகள் பெல்ட் வேஸ்ட் வெப் ஓஜி பட்டேர்ன் (Belt Waist Web OG Pattern), ரூபா 15.71 மில்லியன் கிரயத்தில் 24,500 தொப்பிகள், ரூபா 86.19 மில்லியன் கிரயத்தில் 87,500 மீற்றர் பொலியஸ்டர் பருத்தி மெட்டீரியல் (Polyester cotton material) துணி மற்றும் ரூபா 187.83 மில்லியன் கிரயத்தில் 45,000 மீற்றர் பொலியஸ்டர் கம்பளி மெட்டீரியல் (Polyester wool material) துணி தேவையான ஆய்வுகூட சோதனை இல்லாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெல்ட் வேஸ்ட் வெப் ஓஜி பட்டேர்னின் கொள்வனவு ரூபா 15.17 மில்லியன் மேலதிக கிரயத்தில் தர பரீட்சிப்பிற்கு உட்படாமல், நான்கு முக்கிய விபரக்குறிப்புகளுக்கு இணங்காத கேள்விதாரரிடமிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், நாணயக் கடிதங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் நாணயமாற்று விகித வேறுபாடுகளால் மேலதிகமாக ரூபா 6.54 மில்லியன் செலவிடப்படுவதற்கு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடி மற்றும் விலை உயர்வு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம், நியாயமான விலைகளில் உயர்தரப் பொருட்களைப் பெற்று, அரசாங்கத்திற்குச் சாதகமாக பெறுகை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழிவகுத்திருந்தது. 2024 பெப்ரவரி இறுதியளவில், கொள்வனவு செய்த இருப்பில் 6,694 தொப்பிகள் அல்லது 27 சதவீதம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு வருடத்திற்கும் மேலாக ரூபா 11.37 மில்லியன் பெறுமதியான இருப்பு களஞ்சியத்தில் இருந்தது. பொலியஸ்டர் பருத்தி மெட்டீரியல் துணி வழங்குநருக்கான ரூபா 4.89 மில்லியன் செயலாற்றல் பிணைமுறி இருப்பை வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், பொலியஸ்டர் கம்பளி மெட்டீரியல் துணி கொள்வனவின் போது ஒப்பந்த விலையை விட ரூபா 3.95 மில்லியன் மேலதிக கிரயத்தில் வழங்கல்கள் பெறப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | 2022 இல் தரைப்படையின் வருடாந்தத் தேவைப்பாடுகளுக்காக தேசிய போட்டி பெறுகை முறையின் கீழ் மருந்துப் பொருட்கள், ஆடைப் பொருட்கள், ஆய்வுகூடப் பொருட்கள், பல் மருந்து மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றை ரூபா 299.70 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் பின்னர் ரூபா 277.07 மில்லியனிற்கு மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்ட பெறுகை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் கேள்விதாரர்களுக்குத் தெரிவிக்காமல் இரத்து செய்யப்பட்டது. பின்னர், புதிய கேள்விகள் கோரப்பட்டது, இதன் விளைவாக முன்னைய மதிப்பீட்டை ரூபா 29.63 மில்லியனால், விஞ்சிய கிரயத்தில் அல்லது 3% முதல் 782% வரையான வீச்சில் அதிகரித்த விலைகளின் கீழ் கொள்வனவு செய்வதை விளைவித்தது. மேலும், 2023 ஒக்தோபர் 31 வரையிலும் ரூபா 166.09 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்களை வழங்க முடியவில்லை. | நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடி மற்றும் கட்டுநிதிகள் இல்லாததால் சில பெறுகைகளை பூர்த்திசெய்ய முடியாதமை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது. | அரசாங்கத்திற்கு அதிகபட்ச பொருளாதார நலன்களை உறுதிப்படுத்தும் வகையில், பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ரூபா 272.08 மில்லியன் கிரயத்தில் புடைவை மற்றும் ஆடைப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் 7.12.3 (அ) ஆல் தேவைப்படுத்தப்பட்டவாறு பரந்த விளம்பரம் இல்லாததால் போட்டி கேள்விகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன. | கேள்விதாரர்களிடம் இருந்து உரிய பதில் கிடைக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (i) | வழங்குநர் 650 அலகுகள் சாம் பிரவுன் பெல்ட்களை (வெள்ளி பொருத்துதல்களுடன் கூடிய பழுப்பு தோல்) வழங்குவதை 166 நாட்கள் தாமதப்படுத்திய போதிலும் ரூபா 6.94 மில்லியன் செலவிட்ட பின்னர் ரூபா 779,217 உரிய காலதாமதக் கட்டணத்தை அறவிடாமல் காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2022 இல் பதவி உயர்த்தப்பட்ட மற்றும் கேடட் (cadet) அதிகாரிகளின் முதன்மைத் தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. | பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தேவையான தேவைப்பாடுகளை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு பெறுகைகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ii) | சீருடை, சின்னம் உள்ளிட்ட 700 அலகு பொருட்களை ரூபா 15.03 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யும் போது வழங்குநர் இணங்கிய விபரக்குறிப்புகளுக்கு ஏற்ப பொருட்களை வழங்கத் தவறியதால் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டது. மூன்று சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணங்கள் எதுவும் விதிக்கப்படாமல் விநியோக காலப்பகுதி நீடிக்கப்பட்டது, இதனால் தாமதக் கட்டணமாக ரூபா 1.80 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | குறித்துரைத்த கால எல்லைக்குள் பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்கள் தொடர்பாக பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 3,920 தூக்கப் பைகளை (sleeping bags) தயாரிப்பதற்கு ரூபா 7.5 மில்லியனிற்கு 6,250 மீற்றர் ஒலிவ் கிறீன் ரீ-ஷேர்ட் மெட்டீரியல் மற்றும் ரூபா 8.27 மில்லியனிற்கு 4,410 மீற்றர் 72'' அகல பருத்தி துணி உன்பவற்றை கொள்வனவு செய்யும் போது முறையான தர பரீட்சிப்பு அறிக்கையில் தூக்கப் பைகளுக்கான வண்ணம் மற்றும் துணியின் அகலம் ஆகியவற்றில் வேறுபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது, ஆனால் இந்த முரண்பாடுகளைப் பொருட்படுத்தாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தர பரீட்சிப்பு அறிக்கைகள் கவனத்திற்கொள்ளப் பட வேண்டும். |
| (iv) | ரூபா 12.4 மில்லியனிற்கு 36,000 மீற்றர் 60'' அகல நெட் துணியை (net fabric) கொள்வனவு செய்யும் பொது முதல் சுற்று கூறுவிலைகளின் போது தோன்றிய சிறிய விபரக்குறிப்பு சிக்கல்கள் வழங்குநருடன் கலந்துரையாடப்பட்டு சீர்செய்யப்பட்டிருந்தால், இரண்டாம் சுற்று கூறுவிலைகளைத் தொடர்ந்து கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட ரூபா 3.76 மில்லியன் மேலதிக கிரயத்தை தவிர்த்திருக்கலாம். மேலும், ரூபா 10.40 மில்லியனிற்கு 21,333 மீற்றர் லைனிங் துணியை கொள்வனவு செய்யும் போது 60'' அகலம் கொண்ட 100% பொலியஸ்டர் துணிக்கு பதிலாக 46'' அகல பொலியஸ்டர் பருத்தி கலந்த துணி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிடத்தக்க விலகல்களைக் கருத்தில் கொண்டு கூறுவிலைகளை மீண்டும் கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு அதிக சலுகைகள் அளிக்கும் வகையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | ரூபா 8.41 மில்லியனிற்கு 5,625 சதுர அடி தோலை கொள்வனவு செய்யும் போது விபரக்குறிப்புக்கள் 5.6.1(அ) பிரிவில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுபவம் வாய்ந்த அதிகாரிகளால் விபரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 159.36 மில்லியனிற்கு கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது செயலாற்றல் உத்தரவாதங்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், வழங்குநர்கள் ரூபா 25.21 மில்லியன் பெறுமதியான கட்டுமானப் பொருட்களை வழங்கத் தவறியிருந்தனர். | எதிர்கால பெறுகைகளின் போது உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 101.14 மில்லியனிற்கு Oracle - 19c மென்பொருள் உரிமத்தை கொள்வனவு செய்யும் போது விபரக்குறிப்பு ஆவணத்தில் குறிப்பாக குறிப்பிடப்படாத காரணிகளின் அடிப்படையில் கேள்வி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், பதிவுசெய்யப்பட்ட வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 26.30 மில்லியன் குறைந்த கேள்வி பதிவு செய்யப்படாத வழங்குநர் என்று கூறி விலக்கப்பட்டது. மேலும், வழங்குநருடனான உடன்படிக்கையில் கொள்வனவு செய்த மென்பொருளுக்குத் தேவையான பயிற்சி குறிப்பிடப்படாததால், முறையான பயிற்சி எதுவும் பெறப்படவில்லை. இதன் விளைவாக, கொள்வனவு செய்ததிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் மென்பொருள் செயலற்ற நிலையில் உள்ளது. | விபரக்குறிப்பு ஆவணத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், தரைப்படையால் நிர்ணயிக்கப்பட்ட விபரக்குறிப்புக்களின் அடிப்படையில் கேள்வி மதிப்பீடுகள் நடாத்தப்பட்டன. | அரசாங்கம் பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | லெபனான் மற்றும் மாலியில் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் கவச வாகனங்கள் மற்றும் இயங்கும் கருவிகளை பழுதுபார்ப்பதற்காக ரூபா 72.83 மில்லியன் செலவிட்டு மேலதிகமாக உதிரி பாகங்களை கொள்வனவு செய்யும் போது வழங்குநர்கள் தங்கள் கேள்விகளை முன்வைப்பதற்கு போதுமான காலம் | நாட்டில் நிலவும் நிலைமைகள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டன, மேலும் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களின் தரவுத்தளத்தைப் பயன்படுத்தி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் இறுதிப் பயனரின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொள்வனவு | பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க போட்டி கேள்விகளைப் பெற்றுக்கெள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 36.49 மில்லியன் கிரயமான 722 இருப்பு அலகுகளை கொள்வனவு செய்வதில் தெளிவான விபரக்குறிப்புக்கள் இல்லாததால் 53% முதல் 12643% வரையிலான கணிசமான விலை இடைவெளியுடன் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், கேள்வி மதிப்பீடு மற்றும் பெறுகைக் குழு தீர்மானங்களுக்காக நான்கு மாத காலம் எடுக்கப்பட்டதால், இந்த நேரத்தில் நாணயமாற்று விகித தளம்பல்கள் ரூபா 14.06 மில்லியன் மேலதிக கிரயத்தை விளைவித்தது. சுசுகி DRZ 400CC attack மோட்டார்சைக்கிள்களுக்கான உதிரி பாகங்களை கொள்வனவு செய்யும் போது கேள்வி திறக்கப்பட்டாலும் தெளிவான விளக்கம் இல்லாமல் நிராகரிக்கப்பட்டது. இரண்டாவது சுற்றில் விலைகளை சமர்ப்பித்த கேள்விதாரரிடமிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது, அவை முதல் சுற்றில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் சமர்ப்பித்த விலைகளை விட ரூபா 7.27 மில்லியன் கேள்வி அதிகமாக இருந்தது. மேலும், வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து வாகன உதிரி பாகங்களை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப கட்டத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 8.77 மில்லியன் கேள்வி நிராகரிக்கப்பட்டது. மாறாக, கேள்விகள் மீண்டும் அழைக்கப்பட்டு கேள்விதாரர் ஒருவரிடம் இருந்து ரூபா 13.30 மில்லியன் விலையில் கொள்வனவு செய்யப்பட்டது, ரூபா 4.53 மில்லியன் மேலதிக செலவினத்தை விளைவித்தது. Variable Transmission முறைமையை (WMZ551A.08) கொள்வனவு செய்யும் போது, முன்பு தீர்மானிக்கப்பட்ட இரண்டு அலகுகளில் இருந்து ஒரு அலகாக அளவு குறைக்கப்பட்டது, இதன் விளைவாக, தகுதிவாய்ந்த கேள்விதாரரின் கேள்வி நிராகரிக்கப்பட்டது, மேலும் கேள்விகளை மீண்டும் அழைப்பது ரூபா 4.19 மில்லியன் மேலதிக செலவினத்திற்கு வழிவகுத்தது.

மேற்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 23 விபரக்குறிப்புக்களுடன் இணங்கவில்லை என்பதைக் குறிக்கும் முறையான தர பரீட்சிப்பு அறிக்கை மற்றும் அவை பொருத்தமற்றவை என்பதைக் குறிக்கும் கள பரீட்சிப்பு அறிக்கை இருந்த போதிலும் 1000 சோடி Boot Desert ரூபா 26.95 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்ய வேண்டிய அவசரத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது. | தரம் மற்றும் கள பரீட்சிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் உரிய தரத்துடன் கூடிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | ரூபா 24.10 மில்லியனிற்கு 20 ஹெவி டியூட்டி டிஜிட்டல் பிரதிசெய்தல் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது பிரதிகளின் மதிப்பிடப்பட்ட அளவு மற்றும் நிலையான கிரயங்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாதமை ரூபா 6.74 மில்லியன் மேலதிக கிரயத்திற்கு வழிவகுத்திருந்தது. இந்த பிரதிசெய்தல் இயந்திரங்களில் ஒன்று அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது, ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது பயன்படுத்தப்படாமல் இருந்தது. | குறைந்த மின்சார நுகர்வு கருதி கொள்வனவு செய்யப்பட்டது. | மதிப்பீட்டு செயன்முறையின் போது, நேரடி, மறைமுக மற்றும் நேரம் தொடர்பான கிரயங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். |
| (ஓ) | தரைப்படையின் கைத்தொழில் துறையில் tire retreading செயற்திட்டத்திற்காக ரூபா 15.47 மில்லியன் கிரயமான மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் போது கேள்வி ஆவணங்களில் வெளிப்படையாக குறிப்பிடப்படாத மதிப்பீட்டு காரணிகள் கேள்வி மதிப்பீட்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. | மொத்த இருப்பு முறைமையின் கீழ் குறைந்தபட்ச கேள்விகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஔ) | ரூபா 12.53 மில்லியனிற்கு 26,650 சோடி சொக்ஸ் பொலியஸ்டர் காட்டன் ஒலிவ் கிறீனை கொள்வனவு செய்யும் போது முதல் சுற்று கேள்வியின் போது முறையான தர பரீட்சிப்பு அறிக்கையின் பிரகாரம் மாதிரிகள் பொருத்தமானவை என சரிபார்க்கப்பட்டது. எனினும், கேள்விகளை மீண்டும் அழைத்த பின்னர் ரூபா 5.89 மில்லியன் மேலதிக கிரயத்தில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், ரூபா 12.43 மில்லியன் பெறுமதியான 26,449 சோடிகள் கையிருப்பில் இருந்ததுடன் உண்மையான தேவையை மதிப்பிடாமல் கொள்வனவு செய்யப்பட்டதால் ஐந்து மாதங்களாக விநியோகிக்கப்படாமல் இருந்தது. | கொள்வனவு செய்வதில் உள்ள அவசரம் மற்றும் வருடாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருப்பு கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக இந்த நிலைமைகள் எழுந்தன. | தர பரீட்சிப்பு அறிக்கைகளின் அடிப்படையில், தரநிலைகளை பூர்த்தி செய்யும் பொருட்கள் தேவைகளை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச விலைகளில் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | மீளாய்வாண்டின் போது தரைப்படையின் தேவைகளுக்காக ரூபா 202.27 மில்லியன் கிரயத்தில் மருந்துகள் மற்றும் காயத்திற்கு மேல் இடும் பொருட்களை கொள்வனவு செய்யும் போது நுகரக்கூடிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான விபரக்குறிப்புக்கள் பெறுகை வழிகாட்டல்களின் 2.4.11 ஆம் வழிகாட்டல் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) விதிமுறைகளின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. 2.3.1, 2.3.2 மற்றும் 2.3.3 ஆம் வழிகாட்டல்கள், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் 4.1.1(அ), 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் பெறுகை வழிகாட்டல்கள் என்பன பின்பற்றப்படாததால், குறிப்பிடத்தக்க அளவு காலம் கேள்வி மதிப்பீட்டிற்கு எடுக்கப்பட்டது. இதன் விளைவாக, 68 வகையான மருந்துகளும், 95 வகையான மருந்துகளில் 33% முதல் 99% வரையிலான மருந்துகள் மற்றும் காயத்திற்கு மேல் இடும் பொருட்களை 2024 மார்ச் மாதத்திற்குள் கொள்வனவு செய்ய முடியவில்லை, இதனால் நோயாளிகள் அந்த மருந்துகளை வெளியில் இருந்து கொள்வனவு செய்வதற்கு வழிவகுத்தது. மேலும், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சான்றிதழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 43.49 மில்லியன் பெறுமதியான மருந்துகளிற்காக பெறப்படவில்லை. | இறக்குமதி கால எல்லையை கருத்திற் கொண்டு அவசரமாக கொள்வனவு செய்ததாலும், சில மருந்துப்பொருள் கம்பனிகள் தரைப்படைக்கு மருந்துகளை வழங்குவதற்கு விருப்பமில்லாததாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. | பெறுகை வழிகாட்டல்கள், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) விதிமுறைகள் மற்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் பிரகாரம் மருந்துகள் மற்றும் காயங்களுக்கு மேல் இடும் பொருட்களின் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கா) | தர பரீட்சிப்பு அறிக்கைகளிலிருந்து விலகி மொத்தம் 2,100 சோடி காலணிகள் ரூபா 37.89 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கேள்வி திறப்பதில் 14 நாட்கள் தாமதம் ஏற்பட்டதாலும், பெறுகை நடவடிக்கைகளில் மூன்று ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டதாலும், தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும், நாணயமாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் ரூபா 11.31 மில்லியன் மேலதிக கிரயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. | கட்டுநிதிகள் இல்லாமை மற்றும் நாணயமாற்று விகிதங்களின் அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக இந்த நிலைமைகள் ஏற்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் உயர் தரமான பொருட்களை கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்தி பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்தில் தனியாருக்கு ரூபா 27.32 மில்லியன் கிரயத்தில் 35,000 ஜெர்சிகளை (jerseys) கொள்வனவு செய்யும் போதும் 2020-2021 காலப்பகுதியில் தரைப்படையின் எதிர்கால மூலோபாயங்களை அமுல்படுத்தும் போதும் இணங்கப்பட்ட அளவின் ஒரு பகுதி மாத்திரமே வழங்கப்பட்டு, மீதமுள்ள பகுதி இணங்கப்பட்ட விலையை விட அதிகமாக ரூபா 1.91 மில்லியன் விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. 2022 இல் பெறப்பட்ட இந்த இருப்பு மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் வரையிலும் விடுவிக்கப்படாததால், இது இருப்பில் நிறமாற்றத்தை ஏற்படுத்தியதுடன் பல்வேறு களஞ்சியம் தொடர்பான செலவினங்களை ஏற்படுத்தியது. இந்த சூழ்நிலையின் காரணமாக, குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திலிருந்து விலகிய வழக்கமான பணியாளர்களுக்கு கணிசமான அளவு இருப்பை விநியோகிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. | நாட்டில் நிலவும் சூழ்நிலைகள் காரணமாக, ஆட்சேர்ப்பு தொடர்பாக சிக்கல்கள் எழுந்ததுடன், தற்போது சம்பந்தப்பட்ட கையிருப்பு ஏனைய இராணுவ வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாடுகள் சரியாக இனங்காணப்பட வேண்டும், மேலும் அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கீ) | ரூபா 8.18 மில்லியன் கிரயத்தில் 600 தேசிய, பௌத்த மற்றும் இராணுவக் கொடிகளை கொள்வனவு செய்யும் போது விபரக்குறிப்புக்களுடனான முரண்பாடுகள் இரண்டு முறை கேள்விகளை நிராகரிப்பதற்கு வழிவகுத்தது. மூன்றாவது முறை, முன்னர் குறிப்பிடப்பட்ட விபரக்குறிப்பு முரண்பாடுகளைப் புறக்கணித்து, முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களில் அதே கேள்விதாரர் சமர்ப்பித்த கேள்விகளை விட அதிகமாக ரூபா 3.10 மில்லியன் விலையில் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இரகசியத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையைப் பேணுவதன் மூலம் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. | கேள்வி திறத்தல் மற்றும் நிராகரிப்புச் செயன்முறையின் போது விலைகள் உட்பட முக்கியமான தகவல்களை வெளிப்படுத்துவதால் ஏற்படும் நிபந்தனைகள் முகாமை செய்யப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக மாலியில் நிறுத்த திட்டமிடப்பட்டுள்ள 685 | எதிர்காலத்தில் நிலைநிறுத்த திட்டமிடப்பட்டுள்ள இராணுவப் பிரிவுகளுக்கு உரிய | இந்த கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | இராணுவ வீரர்களுக்கு தேவையான பொருட்கள், ஆயுதம் ஏந்திய மற்றும் நிராயுதபாணியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், இந்த கடமைகளுக்காக ஒரு பிரிவு மாத்திரமே பயன்படுத்தப்பட்டதால், கொள்வனவு செய்ததில் இருந்து ஐ.அ.டொலர் 4.57 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டது. | பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஆயுதம் தாங்கிய வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மற்றும் உபகரணங்களை அரசாங்கத்திற்கு அதிகபட்ச நலனை வழங்கும் வகையில் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவில் 14 ஹெக்டெயர் நிலப்பரப்பு குண்டசாலை பிரதேச செயலாளரினால் 2007 ஆம் ஆண்டில் இலங்கை தரைப்படையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டில் அளவீட்டு நடவடிக்கைகளின் போது அங்கீகரிக்கப்படாத குடியேற்றவாசிகள் காணியை அதன் விளைவற்ற நிலை காரணமாக வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதை தரைப்படை கண்டுபிடித்தது. இந்த கண்டுபிடிப்பு இருந்த போதிலும் காணியில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மெதுவான வேகத்தில் முன்னேறியிருந்தன. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில், பிரதேச செயலகம் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் காணிக்கு தீர்வு காணும் செயன்முறைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. | தரைப்படைக்கு சொந்தமான சொத்துக்களை அகற்றி பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நாட்டின் பல்வேறு பகுதிகளில் தங்குமிடம், அலுவலகம் மற்றும் களஞ்சிய வசதிகளை அமைப்பதற்காக, தரைப்படை வருடாந்தம் ரூபா 132.76 மில்லியனை செலவிட்டு 25 கட்டிடங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. இதில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக வாடகைக்கு பெறப்பட்டிருந்த சில கட்டிடங்களும் உள்ளன. இந்த வாடகை கட்டிடங்களுக்கு பதிலாக அரசாங்க கட்டிடங்களை வழங்குவதில் கவனம் செலுத்தப்படவில்லை, மேலும் ரூபா 460 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் திட்டமிடப்பட்ட வீடுகள் | வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வந்த 40 கட்டிடங்களில் பதினைந்து கட்டிடங்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. | தரைப்படையின் வாடகை செலவினங்களை குறைப்பதற்கும், திட்டமிடப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கட்டிடங்கள் 2018 முதல் 2023 வரை வடிவமைக்கப்பட்டவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தால், இந்த செலவினத்தை குறைத்திருக்க முடியும். | | |
| (ஈ) | முறையான உரிமை மாற்றம் இல்லாமல், ஏனைய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து 17 டிராக்டர்கள், 10 டபிள்-கெப் வாகனங்கள், 14 ஜீப்கள், 9 மோட்டார் சைக்கிள்கள், 8 ஆம்புலன்ஸ்கள், 7 டிரெய்லர்கள், 6 மினி-பெல்டர்கள், 5 பேருந்துகள், 5 டிரக்குகள், 4 சிங்கிள்-கெப் வாகனங்கள், 4 தண்ணீர்/எரிபொருள் தாங்கிகள் மற்றும் 1 வான் ஆகியவற்றை தரைப்படை தற்போது பயன்படுத்தி வருகின்றது. இவற்றில் இருபத்து நான்கு வாகனங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலான காலப்பகுதியில் சரியான செயற்பாட்டு நிலையில் இல்லாததால் இராணுவ வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. | எஞ்சிய வாகனங்களை இராணுவத் தளபதி என்ற பெயரில் உரிமை மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போது செயற்பாட்டிற்கு பொருத்தமற்ற 24 வாகனங்களை உரிய நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உரிய சொத்துக்களை முறையாக உரிமை மாற்றுவதற்கோ அல்லது அவற்றை உரிய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட 11,307 தனியாட்களை நியமிக்கத் தவறியதாலும், தரைப்படையின் எதிர்கால மூலோபாயங்களை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தியதாலும், ரூபா 270.96 மில்லியன் மொத்த கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 47 விலையில் வாங்கப்பட்ட 47 வகையான புடைவை மற்றும் ஆடைகள் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு விநியோகிக்கப்படாமல் இருந்தது.இந்த புடைவை மற்றும் ஆடைகளில் ரூபா 30.96 மில்லியன் பெறுமதியான 11 வகையான ஆடைகள் 2024 பெப்ரவரி இறுதியளவில் 3 மற்றும் 14 மாதங்களுக்கு இடையில் காலம்கடந்து அவற்றின் உத்தரவாதக் காலத்தை விஞ்சியிருந்தது, மேலும், 30 வகைகளுடன் தொடர்புடைய புடைவை மற்றும் ஆடைகளின் 81,253 அலகுகள் இதற்கு முன்பு இராணுவத்தால் இந்த | எதிர்காலத்தில் உத்தரவாதக் காலத்துடன் புடைவை மற்றும் ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தற்போதுள்ள இருப்பு நிலைமைகள் மற்றும் தேவைப்பாடுகளைக் கண்டறிந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கத்திற்காக வெளிப்படுத்தப்படாத பெறுமதியுடன் கொள்வனவு செய்யப்பட்டன. தற்போது அவற்றின் உத்தரவாதக் காலம் விஞ்சப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | பனாகொட இராணுவ மருத்துவமனையில் உள்ள ஐந்து ஆம்புலன்ஸ்களில் ஒன்று 2022 இல் தீயினால் சேதமடைந்தது, அது இன்னும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நீண்ட காலமாக பயன்பாட்டில் உள்ள ஏனைய மூன்று ஆம்புலன்ஸ்கள் மீண்டும் மீண்டும் இயந்திர கோளாறுகளை சந்தித்துள்ளன. | சட்ட நடவடிக்கைகள் மற்றும் கேள்வி நடைமுறைகளுக்கு கணிசமான அளவு காலம் கடந்திருந்தது. | சொத்துக்களை பராமரிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2019 முதல் 2022 வரை 29 வெவ்வேறு பொருட்களின் 366,635 அலகுகள் கொண்ட ரூபா 88.19 மில்லியன் பெறுமதியான உத்தியோகபூர்வ சின்னங்களுடன் சேர்த்து பல்வேறு புடைவைகள், காலணிகள் மற்றும் ஆடைப் பொருட்களின் இருப்பு களஞ்சியத்தில் விநியோகிக்கப்படாமல் இருந்தன. எனினும், ராங்க் ஸ்டார் (Rank Star) தங்கம், வெள்ளி மற்றும் கறுப்பு பதக்க (bages) வகைகளில் 16,000 உத்தியோகபூர்வ சின்னங்கள் மீளாய்வாண்டில் ரூபா 16.90 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த பொருட்களும் விநியோகிக்கப்படாமல் உள்ளன. மேலும், 2022 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16.53 மில்லியன் பெறுமதியான 24,614 jerseys மீளாய்வாண்டின் ஏப்ரல் அளவில் களஞ்சியத்தில் இருந்தது, அவற்றின் தேவையான தரத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியது. ரூபா 963.54 மில்லியன் பெறுமதியான 35 வகையான புடைவை மற்றும் ஆடைகளின் 653,692 அலகு இருப்பு மெதுவாக நகரும் இருப்புக்களாக இருந்தன. | உரிய இருப்புக்களை உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேவைகளைக் கண்டறிந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | தரைப்படைக்குச் சொந்தமான 1,343 வாகனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 47 வாகனங்களுக்கான காப்புறுதி மேவுகை மீளாய்வாண்டு வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காப்புறுதி செய்யப்பட வேண்டிய வாகனங்களுக்கு காப்புறுதி மேவுகையை |

| | | | |
|---|---|---|---|
| | | | உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஐ) | தரைப்படை பயன்படுத்திய பல்வேறு வகையான 65,564 வெற்று தோட்டாக்களை (empty cartridges) அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அப்புறப்படுத்தல் மற்றும் எதிர்காலத்தில் அவற்றை காட்சிப் பொருட்களாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்கு பாதுகாப்பான அகற்றலை உறுதிப்படுத்த வேண்டும். |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உணவு பங்கீடு மற்றும் எரிபொருள் முறைகேடுகள், வாகன விபத்துக்கள், பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாதம் அல்லாத நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஏற்பட்ட சேதம் மற்றும் நட்டங்களில் 10 ஆண்டுகளில் 90 சம்பவங்களில் இருந்து ரூபா 282.48 மில்லியன், 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 109 சம்பவங்களில் இருந்து ரூபா 12,861.24 மில்லியன் மற்றும் 5 ஆண்டுகளுக்கும் குறைவான 204 சம்பவங்களில் இருந்து 336.16 மில்லியன் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. இதில் 1990 மற்றும் 2016 இற்கு இடையில் நிகழ்ந்த 159 வீதி விபத்துக்களும் உள்ளடங்குகிறது. இந்த நட்டங்களை அறவிடுவதற்கான அல்லது பதிவழிப்பு செய்வதற்கான செயன்முறை மந்தமாகவே இருந்தது. | சில நட்ட சம்பவங்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இந்த நட்டங்களை சரியான முறையில் பதிவழிப்பதற்கு அல்லது மீட்டெடுப்பதற்கான செயன்முறை விரைவுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 94 சம்பவங்கள் தொடர்பான ரூபா 59.18 மில்லியன் கூட்டுமொத்தமான முன்னைய ஆண்டுகளின் இறுதி மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வழங்கப்பட்ட பதிவழிப்புக்கள் கூற்றில் ஆரம்ப மீதியாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான 10 சம்பவங்களுக்காக ரூபா 12.66 | குறித்த விடயம் முடிவடைந்துள்ளதாலும், சில நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதிகளில் முரண்பாடுகள் காரணமாகவும் இந்த நிலைமை ஏற்பட்டது. | இறுதி மீதிக்கும் ஆரம்ப மீதிக்கும் இடையிலான வேறுபாடுகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | மில்லியன் அதிகரித்தும் முன்னைய ஆண்டு தொடர்பான 35 சம்பவங்களுக்காக ரூபா 22.42 மில்லியன் குறைத்தும் மீளாய்வாண்டில் பதிவழிப்புக்கள் கூற்றில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் உணவு பங்கீட்டு (Ration) பிரிவு மற்றும் ரஜக சேவை (Rajaka Service) பிரிவில் உள்ள முறைகேடுகள் மற்றும் 69 பயங்கரவாத மற்றும் பயங்கரவாதமல்லாத தாக்குதல் சம்பவங்கள் ஆகியவற்றிற்காக ரூபா 157.65 மில்லியன் கூட்டுமொத்தம் பதிவழிப்பு செய்யப்பட்ட போதிலும் பதிவழிப்பு செய்யப்படாத தொகையின் ஆரம்ப மீதிகள், பதிவழிப்பு செய்யப்பட்ட தொகைகள் மற்றும் தொடர்புடைய அங்கீகாரங்களின் குறிப்புரை இலக்கங்கள் பதிவழிப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. | அலுவலகம் தொடர்பான பிழை காரணமாக இதனை வெளிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்றுக்கள் மூலம் உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிவில் நிர்வாக பணிப்பாளர் பதவி மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிடமாக உள்ளதுடன், கணக்காய்வு திகதி வரையிலும் இந்தப் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வெற்றிடத்தை நிரப்புமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | உரிய வெற்றிடம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | சிவில் நிர்வாக இயக்குனரகத்தின் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 8,252 ஆக இருந்ததுடன் ஊழியர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட தரவு முறைமை இல்லாதமையானது ஊழியர்கள் ஓய்வு பெறுதல் சிக்கல்கள், சம்பள ஏற்றங்களைத் தயாரித்தல் மற்றும் விடுமுறை முகாமைத்துவம் உள்ளடங்கிய பல்வேறு நிர்வாக பலவீனங்களுக்கு வழிவகுத்தது. | பொருத்தமான தரவு முறைமையை நிறுவுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. | ஒரு முறையான தரவு முறைமை உடனடியாக நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 இல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முடிவின் அடிப்படையில், தரைப்படையின் சம்பளப் பட்டியல் மற்றும் படிகள் முறைமையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பகுதிகள் தொடர்பாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் 2019 இல் 18 முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2004 ஆம் ஆண்டு முதல் முறைமையில் இனங்காணப்பட்ட 72 பிழைகளை சீர்செய்வதற்கு தரைப்படை பகுதி தவறியதன் காரணமாக, சம்பளம் மற்றும் படிகளின் குறைவான கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் பல்வேறு ஒழுங்கற்ற கொடுப்பனவுகள நிகழ்ந்திருந்தன. இதன் காரணமாக, ரூபா 140 பில்லியனிற்கு மேற்பட்ட தொகையான வருடாந்த சம்பளம் மற்றும் படி கொடுப்பனவுகளில் கணிசமான ஆபத்து ஏற்பட்டது, மேலும், இராணுவ வீரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி மற்றும் நிதி அல்லாத நன்மைகளை ஒழுங்குபடுத்தும் முறைமையை மேம்படுத்துவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய சம்பளப்பட்டியல் மற்றும் பதிவேட்டு தகவல் முகாமைத்துவ முறைமையின் (P&RIMS) உருவாக்கம் தொடங்கப்பட்டிருந்ததால், அனைத்து கணக்காய்வு அவதானிப்புக்களிலும் அதிக கவனம் செலுத்தி, தேவைக்கேற்ப ஒன்லைன் பொறிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், தொடர்புடைய அனைத்து அவதானிப்புக்களையும் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பலவீனங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் மென்பொருள் ஆலோசனை நிறுவனங்களின் முன்மொழிவுகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் யோசனைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் சம்பளம் மற்றும் படிகள் தொடர்பான அபாயங்களைக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வெரஹெர இராணுவ மருத்துவமனையில் அமைந்துள்ள மருந்துப்பொருள் களஞ்சிய கட்டிடம் சுகாதார அமைச்சு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அல்லது சர்வதேச நியமங்களின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டில் 14,450 சதுர அடியில் மருந்து களஞ்சியத்தை அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இந்தத் தேவைப்பாடு இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண பணிகள் தொடங்கப்பட்டு, ஏற்பாடுகளின் கிடைப்பனவின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | திட்டமிட்டவாறு கட்டிடம் நிர்மாணிக்கப்பட வேண்டும், மேலும் மருந்துகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஏற்றுமதி சார்ந்த பயிர்ச்செய்கை, கரிம உர உற்பத்தி, சுகாதார சேவைகளை உகந்த மட்டத்திற்கு மேம்படுத்துதல், தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான | சில செயற்திட்டங்கள் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் ஏனையவை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆம்புலன்ஸ் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், போர்வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல், அகுனகொலபெலஸ்ஸ களஞ்சிய வளாகத்தில் பாதுகாப்பு நிலைகளை நிர்மாணித்தல், கஜசிங்கபுர களஞ்சிய வளாகத்தில் கட்டிட உத்தியோகத்தர் குடியிருப்பு மற்றும் இராணுவ வீரர்களுக்கு வாகன விபத்து விழிப்புணர்வு குறித்த விரிவுரைகளை ஏற்பாடு செய்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுதல் மீளாய்வாண்டில் 50% இற்கும் குறைவாகவே இருந்தன. | அமுல்ப்படுத்துவதில் தாமதத்தை சந்திக்கின்றன. | எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராணுவத்தில் 52,321, சிரேஷ்ட சிவில் பதவியணியினர்களில் 3 மற்றும் மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் 39 உட்பட 2,894 வெற்றிடங்கள் என மொத்தம் 55,215 வெற்றிடங்கள் உள்ளன. | அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அதற்கிணங்க தரைப்படை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உண்மையான பதவியணியினருடன் பொருத்துவதற்கு மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |